# இப்படிப்பட்ட சிரமமான காலங்களில், சிறிது நிலையில்லாமல் இருப்பது பொதுவானதே.

நீங்கள் சிறிது மன-அழுத்தத்துடனோ, படபடப்பாகவோ, சோகமாகவோ இருக்கக்கூடும்.

ஆனால், இந்த உணர்வுகள் அளவுக்கதிமாக ஆகிவிட்டால், அல்லது சிறிது காலத்திற்குத் தொடர்ந்து நீடித்தால் என்ன செய்வது?

எவ்வளவு விரைவாக நீங்கள் HeadtoHealth (ஹெட்-டு-ஹெல்ப் ) எனும் சேவையின் உதவியை நாடுகிறீர்களோ, அந்த அளவிற்கு அது உங்களுக்கு நலம் பயக்கும்.

## தொலைபேசி மூலம் அழையுங்கள் 1800 595 212

மற்றும் உங்களுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த மன-நல ஆதரவுதவியினைப் பெறுங்கள்.

HEAD TO HEALTH

HEAD TO HEALTH

1800 595 212

| உரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள் | உங்களுக்குத் தேவைப்படும் உதவியின் அளவு-நிலை என்ன என்பதைத் தீர்மானியுங்கள் | உங்களுக்கு மிகவும் ஏற்ற சேவையுடன் தொடர்புகொள்ளுங்கள் |
|---|---|---|
| சுகாதாரத் தொழிலாளர் ஒருவர் உங்களிடம் சில கேள்விகள் கேட்பார். உங்களுடைய தற்போதையத் தேவைகளுக்கு எப்படிப்பட்ட ஆதரவுதவிகள் மிகவும் ஏற்றதாக இருக்கும் என்பதை நாங்கள் விளங்கிக்கொள்ள நீங்கள் கொடுக்கும் தகவல்கள் எமக்கு உதவியாக இருக்கும். | சிறிது காலமாக நீங்கள் மன உளைச்சளுக்கு ஆளாகியிருந்தால், அல்லது உங்களுடய வாழ்க்கை, உடல் நலம் அல்லது தொடர்புறவுகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தால், உங்களுக்கு உதவக்கூடிய சேவைகளுக்கு உங்களை வழி நடத்த எம்மால் இயலும். | தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் சேவைகள், அல்லது HeadtoHealth சேவை மையங்களில் ஒன்றின் மூலமாக உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சையும், ஆதரவுதவியும் ஏற்பாடு செய்யப்படலாம். |

**HeadtoHealth ஒரு நெருக்கடி கால சேவை அல்ல. உங்களுக்கு உடனடி உதவி தேவைப்பட்டாலோ, உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தீங்கு ஏற்படும் ஆபத்தில் நீங்கள் இருந்தாலோ, தயவு செய்து 000-வை அழையுங்கள்.**

HeadtoHealth என்பது, மன உளைச்சளுக்கு அல்லது மன-நோய்க்கு ஆளாகிக்கொண்டிருக்கக் கூடிய எவ்வொரு வயதையும் சார்ந்த விக்டோரிய மாநில வாசிகளுக்குக் கிடைக்கும் ஒரு இலவச சேவையாகும்.

கட்டணம் செலுத்த வேண்டிய மற்ற சேவைகளுக்கு ஒருவரைப் பரிந்துரைத்தால், அவருடைய நிதி நிலைமையை HeadtoHealth சேவை கருத்தில் கொள்ளும்.

‘டெலி-ஹெல்த்’ எனும் தொலை-வழி சுகாதார சேவை மூலமாகவோ, எமது மையம் ஒன்றில் நேரடியாகவோ உங்களுக்கு உதவுவதற்கான மன-நலத் தாதியர்கள், சமூக சேவகர்கள், சம-நிலைப் பணியாளர்கள், மது மற்றும் இதர போதை-வஸ்து சிகிச்சை குறித்த பணியாளர்கள், அல்லது பொது-மருத்துவர்கள் மற்றும் உளவியலாளர்களுடன் பணியாற்றும் மற்ற சுகாதாரத் தொழிலர்கள் ஆகியோர் எமது அணிகளில் இடம்பெறுவர்.

**இதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள 1800 595 212 எனும் இலக்கத்தினை அழையுங்கள், அல்லது headtohealth.org.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.**

Australian Government

phn An Australian Government Initiative

HeadtoHealth சேவையானது Victoria’s Primary Health Networks எனும் கட்டமைப்பு டன் ஒத்துழைப்பாய் இயங்கும் ஒரு முன்னெடுப்பாகும், மற்றும் இது Australian Government -இன் நிதியுதவியைப் பெறுகிறது.